# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.05.06 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம்

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) விஜயதாச
ராஜபக்ஷ அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 72.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம்*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அரசியலமைப்பின் 12(1) ஆம் உட்பிரிவினை உட்புகுத்தல்*

***2.*** அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

"*(1) அ.* ஆளொவ்வருவரும் உயிர்வாழ்வதற்கும் தனிநபர் சுதந்திரத்திற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.".

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் VII அ என்னும் அத்தியாயத்தினைத் திருத்துதல்*

***3.*** அரசியலமைப்பின் VII அ என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் அத்தியாயம் பதிலீடு செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

### "அத்தியாயம் VII அ

### அரசியலமைப்புப் பேரவை

*அரசியலமைப்புப் பேரவையின அமைப்பு*

*41அ. (1)* பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்த (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சர் ;

(ஆ) சபாநாயகர்;

(இ) பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(உ) (i) பிரதம அமைச்சரினாலும் எதிர்க் கட்சித் தலைவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதன்மீது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர்;

(ii) இலங்கை தொழில்வாண்மை யாளர்கள் சங்கத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் தொழில் வாண்மையாளர் ஒருவர்;

(iiii) இலங்கை வர்த்தக சம்மேளத் தினால் பெயர் குறித்து நியமிக்கப் படும் ஆளொருவர்;

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அரச பல்கலைக்கழகமொன்றின் பேராசிரியர் ஒருவரும்,

சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் முறையே எந்த அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக்

குழுக்களைச் சேர்ந்துள்ளார்களோ அந்த அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அல்லாத அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்பட்டு சனாதிபதி யினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(எ) மேற்படி (உ)(iv) பந்தியின்கீழ் பெயர் குறிக்கப்பட வேண்டிய அரச பல்கலைக் கழகமொன்றின் பேராசியர் ஒருவர் தொடர்பில் அரச பல்கலைக்கழகங் களின் துணைவேந்தர்களிடையே ஒருமித்த உடன்பாடு காணப்படாத போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் களின் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படு கின்ற பேராசிரியர் ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்;

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளர் ஆதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் உட்பந்தி (உ) அல்லது (ஊ) என்பதன் கீழான நியமனங்கள் பெயர் குறித்த நியமனங்களுக்கான தேவை ஏற்பட்டதும் இயன்றளவு விரைவில் செய்யப் படுவதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமை யாதல் வேண்டும்.

(4) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை நியமிக்கையில் பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியலமைப்புப் பேரவை உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கென பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவம் வகிக்கின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களது தலைவர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆட்கள் உயர்நிலையும் நேர்மையும் கொண்ட, பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் கீர்த்தி வாய்ந்தவர்களும் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும் என்பதுடன் இவர்களது பெயர் குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படு தலும் வேண்டும்.

(6) சனாதிபதி, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்தி களின்கீழ் செய்யப்பட்ட பெயர் குறித்த நியமனங் களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான அறிவித்தல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாள் காலப் பகுதியினுள் அவசியமான நியமனங்களை செய்யத் தவறும் பட்சத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்டோர் அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) (அ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, அரசியலமைப்பின் 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர் மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் அத்துடன் அரசிலயமைப்புப் பேரவையின் உறுப்பனர்களாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பை அடுத்துறும் பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடயத்திற்கேற்ப பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல்லது எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அத்தகைய காலம்வரை அல்லது (1) ஆம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(8) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின்கீழ்

நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரும் அத்தகைய உறுப்பினர் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாத வகையில் உடல் ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராக உள்ளார் என அபிப்பராயம் கொள்ளுவதன் மீது, சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41(உ) என்னும் உரைப்புரையின் (7) ஆம் பந்தியின்கீழ் அவருடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின்கீழ் அல்லது (உ) என்னும் உட்பந்தியின்கீழ் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிடமேற்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின் போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழ், (உ) என்னும் உட்பந்தியின்கீழ் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அந்த உட்பந்திகளின்கீழ் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகலாகாது.

(11) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழும் (உ) என்னும் உட்பந்தியின் கீழும் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழும் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையானது நியமனங்களை விதந்துரைத்தல்

41ஆ. (1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற்கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமூகக்

குழுக்களைப் பிரதிபலித்தலை உறுதிப்படுத்து வதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்கான மூன்று ஆட்களை விதந்துரைத்ததல் வேண்டுமேன்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதினான்கு நாட்களினுள் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர் களையும் நியமித்தல் வேண்டும்:

சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாட்களுக் குள் அவசியமான நியமனங்களைச் செய்யத்தவறும் பட்சத்தில், விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற திகதியிலிருந்து பயன்பட–

(அ) ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர் களாக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், ஆணைக்குழுவின் உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் எவரின் பெயர் முதலாவ தாக உள்ளதோ அவர், ஆணைக்குழு வின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த, இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏனைய எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்கு வகை சொல்லபற்பாதலும் பதிலளித்தலும் வேண்டும்.

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு;

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழு;

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு;

(எ) நிதி ஆணைக்குழு;

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு;

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல்

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதினான்கு நாட்களை விஞ்சுமொரு காலப்பகுதிக்குப் பதிற் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயினும், ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின்மீது அத்தகைய பதில் நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய பதினான்கு நாட்களை விஞ்சாத தொடர்ந்துவரும் காலப்குதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், நியமனம் தொடர்பான அதன் பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினது அபிப் பிராயங்களைப் பெறுதல் வேண்டும்.

## அட்டவணை

### பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும்;

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்;

(இ) தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

### பாகம் II

(அ) சட்டத்துறை - தலைமையதிபதி;

(ஆ) கணக்காய்வர் - தலைமையதிபதி;

(இ) பொலிசுப் பரிசோதகர் - தலைமையதிபதி;

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்;

(உ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்);

(ஊ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

**பேரவையின் செயலாளர் தலைமை யதிபதியும் ஏனைய அலுவலர்களும்**

41(ஈ) (1) மூன்று வருட காலப்பகுதி ஒன்றுக்கு பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் - தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும். அவருடைய பதவிக் காலம் முடிவடைவதன் மேல், செயலாளர் தலைமை யதிபதி மீள நியமிப்பதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்பட வேண்டியனவான அத்தகைய நியதிகள் நிபந்தனைகள்மீது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

பேரவையின் கூட்டங்கள்

41உ(1). பேரவையானது, குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும் அத்துடன் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின்மீது பேரவையின் செயலாளர் - தலைமையதிபதியினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின் பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின் எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமைதாங்குதலும் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்யத் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிவையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய வலிதுடைதலுமாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமைதாங்கும் ஏனைய உறுப்பினர் மூல வாக்கொன்றை உடையவராதல் ஆகாது. ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41ஆ இன் அல்லது உறுப்புரை 41இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) உறுப்புரை 41அ இன் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின், (உ) என்னும் உட்பந்தியின் அல்லது (ஊ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரும், பேரவையின் முன்கூட்டிய அனுமதியின்றி பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவருமான பேரவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயனுறுவதாக பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவை, முழுமையாக அமைக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். அத்துடன் பேரவையின் செயல், நடபடி

அல்லது முடிபு எதுவும் பேரவை முழுமையாக அமைக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

பேரவையின் உறுப்பினர்கள் பதவியில் தொடர்ந்திருத்தல்

41ஊ. பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றுது எது எப்படியிருப்பினும், பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களும் கடமைகளும்

41எ. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப் பகுதியின்போதான அதன் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பால் அல்லது வேறேதேனும் சட்டத்தால் அதன்மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அதற்கு குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

பேரவையின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப் படுதல்

41ஏ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் முடிபுகளின் முடிவாந்தன்மை

41ஐ. 126 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக் கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிவை அல்லது பேரவையினால் அளிக் கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப் பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின்மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக் கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றும் முடிவானதாக இருத்தலும் வேண்டும்.".

அரசியலமைப் பின் 44 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**4**. அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதென சனாதிபதி கருதுமிடத்து பிரதம அமைச்சரின் கலந்தாலோசனை யுடன்" என்னும் சொற்கள் நீக்கப்பட்டு, "பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

அரசியலமைப் பின் 45 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**5**. அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதென சனாதிபதி கருதுமிடத்து பிரதம அமைச்சரின் கலந்தாலோசனை யுடன்" என்னும் சொற்கள் நீக்கப்பட்டு, "பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

அரசியலமைப் பின் 45 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**6**. அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லுக்கு முன்பு, "பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**7**. அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், “பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதென சனாதிபதி கருதுமிடத்து பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன்” என்னும் சொற்கள் நீக்கப்பட்டு, “பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 47 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**8**. அரசியலமைப்பின் 47 ஆம் உறுப்புரையின் (3) ஆம் மற்றும் (4) பந்திகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

*அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**9**. அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

**பகிரங்க சேவை ஆணைக்குழு**

*பகிரங்க சேவை ஆணைக்குழு*

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

“(1) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட (இவ்வத்தியாயத்தில், “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அவர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர், பகிரங்க அலுவலர்களாகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களாகவிருத்தல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது அதன் தவிசாளராக அத்தகைய உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.”.

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

“(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்கூட்டியே தமது பதவியைத் துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (6) ஆம் துணை உறுப்புரையின்கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டாலொழிய அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.”.

*அரசியலமைப்பின் 61ஊ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**10**. அரசியலமைப்பின் 61ஊ ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

*“பகிரங்க அலுவலர்*

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காகப் “பகிரங்க அலுவலர்” என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை அல்லது தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவரை அல்லது நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை அல்லது கணக்காய்வு சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவையின் உறுப்பினரொருவரை உள்ளடக்காது.”.

**11.** அரசியலமைப்பின் 65 ஆவது உறுப்புரையின் (6) ஆவது பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:- *பதிற் கடமையாற்றும் செயலாளர் நாயகத்தை நியமித்தல்*

"(6) செயலாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளபோதெல்லாம் செயலாளர் நாயகத்தின் இடத்தில் செயலாற்றுவதற்கு சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கு உட்பட்டதாக ஆளொருவரை நியமிப்பதற்கான தத்துவமுடையவராகவிருத்தல் வேண்டும்.".

**12.** அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தி பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:- *91(1) ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

(1) அப்பந்தியின் (vஅ) ஆம் பந்தியின் பின்னர் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(vஆ) 41அ ஆம் உறுப்புரையின் (1) ஆவது பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத அரசியலமைப்புப் பேரவையின் ஓர் உறுப்பினர்.".

(2) அப்பந்தியின் (xii) பந்திக்கு உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(xiii) இலங்கைப் பிரசையல்லாத அல்லது வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவுமுள்ள இலங்கைப் பிரசையொருவர்.".

**13.** அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (5) (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:- *தேர்தல் காலத்தில் செய்திகளை வெளியிடுதல்*

(5) (ஆ) உட்பந்தி (அ) வின்கீழ் அவர்களுக்கு வழங்கப்படுவதான அத்தகைய வழிகாட்டிகளுடன் இணங்கியொழுவதை

உறுதிப்படுவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி அலை வரிசையின் தவிசாளரினதும் மற்றும் அரசினால் சொந்த மாக்கப்பட்ட அல்லது கட்டுப்பாடுத்தப்பட்ட வேறு ஒவ்வொரு ஒளிபரப்பு அல்லது ஒலிபரப்பு தொழில்முயற்சியின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

*அமைச்சின் செயலாளர் நிதி நடவடிக்கை களுக்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்*

**14.** அரசியலமைப்பின் 149(2) ஆவது பந்தியின் பின்னர் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

"149(3) ஒவ்வொரு அமைச்சினதும் செயலாளர் குறித்த அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலராக இருப்பதுடன், அந்த அமைச்சின்கீழ் உள்ள சகல நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மற்றும் அவ் அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்குக் கிடைக்கப்பெறும் நிதி என்பன தொடர்பில் அவர் தொடர்புடைய அமைச்சருக்கும் பாராளுமன்றத்துக்கும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்.".

*அரசிலயமைப்பில் 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ உறுப்புரைகளை உட்புகுத்துதல்*

**15.** பின்வரும் உறுப்புரைகள் 153 ஆம் உறுப்புரையை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் அவை அரசியலமைப்பின் உறுப்புரை 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

### கணக்காய்வு சேவை ஆணைக்குழு

*"கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் அமைப்பு*

153அ. (1) (இவ்வத்தியாயத்தில், "ஆணைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்த, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

(ஆ) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

(இ) நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு 1 அலுவலர்.

(2) (அ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர்:-

(i) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து முன்னரே பதவி விலகினாலொழிய;

(ii) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய;

(iii) பாராளுமன்ற அல்லது மாகாண சபை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வந்தாலொழிய,

மூன்று ஆண்டுகள் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்

புரையின் மீது மேலதிக காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(3) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்துக்காக அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படலாம். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக் காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்

153ஆ. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1) ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச

கணக்காய்வு சேவை தாபிக்கப்படல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர் விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகள்*

153இ. (1) இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவி விலக்கல் ஆகியவற்றுக்கான தத்துவம் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்துதல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் வேண்டும்.

(அ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கொள்கைக்கு அமைவாக இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் ஆட்சேர்ப்புத் திட்டங்கள், நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி விலக்கல் தொடர்பான விதிகளைத் தயாரித்தல்;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள தேசிய கணக்காய்வுச் சேவையின் வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல்; மற்றும்

(இ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடிய வாறான அத்தகைய வேறு தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்துதல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதல்.

(3) (2) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்படுகின்ற விதிகளை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட ஆணைக்குழு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(4) அவ்வாறான ஒவ்வொரு விதியும் அவ்வாறு வெளியிடப்பட்ட திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) அவ்வாறான ஒவ்வொரு விதியும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி மேற்படி அங்கீகரிக்கப்படாத திகதி முதல் நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்கீழ் ஏற்கனவே புரியப்பட்ட எதற்கும் பாதிப்பு ஏற்படுதலாகாது.

ஆணைக்குழுவின் அல்லது இலங்கை கணக்காய்வுச் சேவையின் முடிபு மீது செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தணித்தல் தவறொன்றாதல்

153ஈ. (1) எவரேனும் ஒருவர் அவரின் கடமையின் போதல்லாத சந்தர்ப்பத்தில் நேரடியாக அல்லது வேறு எவரேனும் ஒருவர் ஊடாக ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் உறுப்பினரின் முடிபு மீது செல்வாக்குச் செலுத்தும் அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கும் ஆள் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசிலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பதற்கும் நியாயாதிக்கததைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சட்ட நடவடிக்கை முறைகளிலிருந்தான விடுபாட்டு உரிமை*

153உ. 126 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்துக்கமையவும் மற்றும் 59 என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், இவ்வத்தியாயத்தின்கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் பணிகளைப் புரிவதில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்வதற்கான, வெளிப்படுத்துவதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாய சபையோ கொண்டிருத்தலாகாது.

*செலவுகள் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும்*

153ஊ. ஆணைக்குழுவின் செலவுகளும் செலவீனங்களும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*நிருவாக மேன் முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்தல்*

153எ. நியமனம், பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பான அவர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவி விலக்கல் மீதான ஏதேனும் கட்டளையால் இடருற்றுள்ள இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலர் அதற்கு எதிராக 59 ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம்

என்பதுடன் அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகைசொல்லற்பாலதாதல் வேண்டும்*

*153ஏ.* ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்துக்கு வகைசொல்லற்பாலதாக்கப்படுதலும் பதிலளித்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின அறிக்கையொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 155(ஆ) ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

***16.*** அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகின்றது:-

"(5) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அவர் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தவிர்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங்களில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு எந்த உரிமையும் அவருக்கு இல்லை.".

*அரசியலமைப்பில் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ என்னும் புதிய உறுப்புரைகளை உட்புகுத்துதல்*

***17.*** அரசியலமைப்பின் 155 ளுளுளு ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசியலமைப்பின் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"ஆணைக் குழுவின் தத்துவங்கள்*

*155எ.* (1) (அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி விலக்கல் என்பன

ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி விலக்கல் தொடர்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படும் போதிலெல்லாம் அத்தகைய ஆணைக்குழுக்களின் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் எவரேனும் இடருற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தால் அத்தகைய நோக்கத்திற்காக ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்திற்கிணங்க நிவாரணத்தை ஏற்பாடு செய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும் பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன்:-

(அ) ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படு

கின்ற கொள்கைக்கு அமைவாக அவற்றை வகுத்தமைத்தல்;

(ஆ) பொலிசு சேவையின் வினைத்திறனையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல்;

(இ) தேசியப் பிரிவினதும் மாகாணப் பிரிவினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு உபகரணங்களின் தன்மையும் வகையும்; மற்றும்

(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறைகளையும்,

உள்ளிட்ட பொலிசு அலுவலர்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கிய நிரல் I இன் பின்னிணைப்பு I இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாப் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

ஆணைக் குழுவின் குறித்த சில தத்துவங்களை குழுவொன்றுக்குக் கையளித்தல்

153ஏ. (1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கத் தத்துவங்களை ஆணைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட

வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினர் களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழு வொன்றுக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு, ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய் வித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப் படுகின்ற குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடி முறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக் குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

ஆணைக்குழு குறித்த சில பணிகளைக் கையளித்தல்

155ஒ. (1) ஆணைக்குழு, பொலிசு அலுவலர்களின் ஏதேனும் வகுதியின் நியமனம், பதவியுயர்வு, இட மாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கத் தத்துவங்களை, ஆணைக்குழுவால் விதந் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தயை கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

மேன் முறையீடு செய்யும் உரிமை

155ஓ. (1) பொலிசு அலுவலர்களின் பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அல்லது பதவி நீக்கம் தொடர்பிலான அதன் தத்து வங்கள் ஆணைக்குழுவால் எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஒ ஆம் உறுப்புரையின் கீழ்

கையளிக்கப்பட்டுள்ளவிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அத்தகைய பொலிசு அலுவலர் கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அவரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது குழுவொன்றால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது பதவி நீக்கம் மீதான ஏதேனும் கட்டளையால் இடருற்ற பொலிசு அலுவலர் ஒருவர், மேன்முறையீடொன்றை ஆக்குவதற்கும் கேட்பதற்குமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறையையும் நேரகாலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1) ஆம் பந்தியின்கீழ் அல்லது (2) ஆம் பந்தியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய மேன்முறையீட்டின் மீது அளிக்கப்பட்ட அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புகளை வழங்குவதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் காலத்துக்குக் காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) இவ்வத்தியாயத்தின் 155ஏ அல்லது 155ஓ என்னும் உறுப்புரையின்கீழ் விடயத்திற்கேற்ப பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது குழுவொன்றுக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின்மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில் இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை கடமைகளை அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறைவேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்

155ஔ. பொலிசு அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட பதவிநீக்கம் தொடர்பான ஏதனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அந்நியாயசபை ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு வேறுபடுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 155க உறுப்புரையைத் திருத்துதல்*

**18.** அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது.

“உளதாம் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பேணுதல்

155க. ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும் வரை இவ்வுறுப்புரை நடைமுறைக்கு வரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும், ஒழுங்கு விதிகளும் மற்றும் நடவடிக்கை முறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.”.

*அரசியலமைப்பின் XIX அ அத்தியாயத்தை உட்புகுத்தல்*

**19.** XIX ஆவது அத்தியாயத்தின் பின்னர் பின்வரும் அத்தியாயம் XIX அ ஆக உட்புகுத்தப்படுகின்றது:-

**“அத்தியாயம் XIX அ**

**தேசிய பெறுகை ஆணைக்குழு**

தேசிய பெறுகை ஆணைக்குழு

156அ. (1) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்த (இவ்வத்தியாயத்தில், “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய பெறுகை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிருவாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தை உடைய ஆட்களுக்கிடையேயிருந்து ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதி உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியை முன்னரே துறந்தா

லன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றிற்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை ஒன்றின் அல்லது உள்ளூரதிகார சபை ஒன்றின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அவர் மீது குடியியற் தகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலுமாகாது.'

*ஆணைக்குழுவின் பணிகள்*

156ஆ. (1) எல்லா அரசாங்க நிறுவனங்களினாலும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத் திறனான நடவடிக்கை முறைகளையும், வழிகாட்டல்களையும் வகுத்தமைத்தல் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும். ஆணைக்குழு அவ் வழிகாட்டல்களை வர்த்தமானியில் வெளியிட ஏற்பாடு

செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் முன்வைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் பொதுமைக்குப் பங்கமின்றி–

(அ) அரசாங்க நிறுவனங்களினால் செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின், வேலைகளின், ஆலோசனைச் சேவைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் எல்லாப் பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களின் அடிப்படையானதா என்பது பற்றி கண்காணித்தலும் பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஆ) அரசாங்க நிறுவனங்களுக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான தகைமைபெற்ற விலை கூறுபவர்கள் யாவருக்கும் அப்பண்டங்கள் மற்றும் சேவைகளினை வழங்குவதற்காக விலைகூறும் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கான சமமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி கண்காணித்தலும் பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(இ) அரசாங்க நிறுவனங்களுக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும்

தகவல் முறைமைகளை வழங்குவதற்கான ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கும், ஒப்பந்தங்களை வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாயமானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின்றனவா என்பது பற்றி கண்காணித்தலும் பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) அரசாங்க நிறுவனங்களினால் நியமிக்கப்படும், பெறுகைகள் தொடர்பான பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பொருத்தமான தகைமையுடையவர்களாக இருக்கின்றார்களா என அறிக்கையிடுதலும்;

(உ) தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் வெளியே, அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்குப் பொறுப்பான அலுவலர்களை அவசியமான நடவடிக்கைகளுக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்; மற்றும்

(ஊ) அவ்வாறான ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அவற்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பணித்தலும்.

## ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்

ஆணைக்குழுவின் தத்துவங்கள்

156இ. (1) ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருவனவற்றைச் செய்ய எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்:-

(அ) ஆணைக்குழுவால் கேள்விக்குட்படுத்தப் படுவதற்கு ஆணைக்குழுவின் முன்னர் சமூகமளிப்பதற்கு;

(ஆ) அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டது மான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு முன்வைப்பதற்கு;

(2) (அ) ஓராம் பந்தியின் கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுமிடத்து, ஆணைக்குழுவின் முன்னர் தோன்று வதற்கு நியாயமான காரணமின்றி தவறும்;

(ஆ) அத்தகைய அறிவித்தலுடன் இணங்கி யொழுகுவதில் ஆணைக்குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக் குழுவால் அவருக்கு விடுக்கப்படும் எவையேனும் கேள்விகளுக்குப் பதிலளிப் பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கும் ; அல்லது

(இ) ஓராம் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பப் பட்ட அறிவித்தலொன்றில் முன்வைக்கப் படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட

ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை முன்வைப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறும் அல்லது மறுக்கும்;

ஒவ்வோராளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சத்திற்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒவ்வொன்றும் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்

156ஈ. (1) ஆணைக்குழுவானது அதன் பணிகளைப் புரிவதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்கத் தவறின், சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து அக்கூட்டத்திற்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள், முடிவு எடுக்கப் படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில் தவிசாளர் அல்லது கூட்டத்துக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடு களுக்கமைவாக ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவலக விடயங்கள் தொடர்பில் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமொன்றுள்ளது எது எவ்வாறிருப் பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் உறுப்பினரொருவரின் நியமனத்தில் அத்தகைய வெற்றிடம் அல்லது குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றதாக்கப்படுவதாக கருதப்படலாகாது.

ஆணைக் குழுவின் பணியாட்டொகுதி

156உ. (1) ஆணைக்குழுவால், தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென கருதப்படக் கூடியவாறாக, செயலாளர் நாயகம் மற்றும் அத்த கைய வேறு அலுவலர்களையும் ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3) அரசியலமைப்பின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய பணிகளைப் புரிவதில் அவரால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்கு துடர்ச்சியெதுவும், வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கை முறையெதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.*

*ஆணைக் குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிப் படுதல்*

*156ஊ. ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*பொருள் கோடல்*

*156எ. இவ்வத்தியாயத்தில், ''அரசாங்க நிறுவனம்'' என்பது அமைச்சு, அரசாங்கத் திணைக் களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகார சபை, அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு தொழில்முயற்சி மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.''.*

*அரசியலமைப் பின் 170 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**20.** அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையானது, ''பகிரங்க அலுவலர்'' என்பதன்கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் பட்டியலை நீக்கிவிட்டு பின்வரும் பட்டியலைச் சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

(அ) சனாதிபதி;

(ஆ) பிரதம அமைச்சர்;

(இ) சபாநாயகர்;

(ஈ) அமைச்சர் ஒருவர்;

(உ) இராஜாங்க அமைச்சர் ஒருவர்;

(ஊ) பிரதி அமைச்சர் ஒருவர்;

(எ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்;

(ஏ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர்;

(ஐ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஒ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஓ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஔ) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(க) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ங) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ச) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ஞ) நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ட) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ண) தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(த) பாராளுமன்ற செயலாளர் நாயகம்;

(ந) பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர்;

(ப) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ம) அரச கரும மொழி ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்;

(ய) கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(ர) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.

ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது.

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்*

**21.** (1) (அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று நிலையாகவுள்ள பாராளுமன்றம், முன்னரே கலைக்கப்பட்டாலன்றி, 2025, ஓகத்து 19 ஆம் தேதிவரை தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கலைக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள் அத்தகைய தேதிக்குப் பின்னர், இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய பதவிகளை வகித்தல் வேண்டும்.

(இ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற ஒவ்வோராளும் அத்தகைய பதவி வகித்தலை தொடருதல் வேண்டும் என்பதுடன், அப்பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(i) பிரதம நீதியரசர்;

(ii) உயர்நீதிமன்ற நீதிபதிகள்;

(iii) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்;

(iv) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின தலைவர்;

(v) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள்;

(vi) சட்டத்துறை தலைமையதிபதி;

(vii) கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(viii) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி;

(ix) நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்);

(x) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ;

(xi) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர்; அல்லது

(xii) நீதித்துறை அலுவலர் ஒருவர், அட்டவணைப்படுத்தப் பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர், பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பின ரொருவராக பதவி வகிக்கின்ற ஒவ்வோராளும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

(அ) பாராளுமன்றப் பேரவை;

(ஆ) தேர்தல் ஆணைக்குழு;

(இ) பகிரங்க சேவைகள் ஆணைக்குழு;

(ஈ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு;

(எ) நிதி ஆணைக்குழு.

ஆயினும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினரொருவராக பதவி வகிக்கும் ஒவ்வோராளும் அரசியலமைப்பின் அத்தியாயம் vii அ விற்கிணங்க அந்தந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் அத்தகைய தேதி வரை தத்தமது முறையான பதவிகளுக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலையும், புரிதலையும், நிறை வேற்றுதலும் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள பின்வரும்:-

(அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும் ; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர் களினால் செய்யப்பட்ட எல்லா மேன்முறையீடுகளும்.

அத்தேதியிலிருந்து பயனுறும் வகையில் 155அ என்னும் உறுப்புரை யின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க தேசிய பொலிசு ஆணைக்குழுவால் அவை தீர்மானிக் கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள இலங்கை அரச கணக்காய்வு சேவை உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பான எல்லாக் கருமங்களும், அத்தேதியிலிருந்து பயனுறும் வகையில் 153அ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**22**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.